## செப்டம்பர் - 05 - செவ்வாய்

**முதல் வாசகம் : 1 தெசலோனி 5: 1 – 6, 9 – 11**

சகோதர சகோதரிகளே! இவை நடக்கும் காலங்களையும் நேரங்களையும் குறித்து உங்களுக்கு எழுதத் தேவையில்லை. ஏனெனில் திருடன் இரவில் வருவதுபோல, ஆண்டவருடைய நாள் வரும் என்பதை நீங்களே திண்ணமாய்த் தெரிந்திருக்கிறீர்கள். "எங்கும் அமைதி, ஆபத்து இல்லை" என்று மக்கள் கூறிக்கொண்டிருக்கும் பொழுது, கருவுற்றிருப்பவருக்கு வேதனை வருவதுபோல, திடீரென அவர்களுக்கு அழிவு வரும் யாரும் தப்பித்துக் கொள்ள இயலாது.ஆனால், அன்பர்களே! நீங்கள் இருளில் நடப்பவர்களல்ல் ஆகவே அந்த நாள் திருடனைப் போல் உங்களுக்கு வராது.நீங்கள் எல்லாரும் ஒளியைச் சார்ந்தவர்கள் பகலில் நடப்பவர்கள். நாம் இரவையோ இருளையோ சார்ந்தவரல்ல. ஆகவே மற்றவர்களைப்போல் நாமும் உறங்கலாகாது விழிப்போடும் அறிவுத் தெளிவோடும் இருப்போம். ஏனெனில் கடவுள் நம்மைத் தம் சினத்துக்கு ஆளாவதற்கு அல்ல, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக மீட்பு அடையவே ஏற்படுத்தியுள்ளார்.நாம் இருந்தாலும் இறந்தாலும் அவரோடு இணைந்து வாழும் வண்ணம் அவர் நம்பொருட்டு இறந்தார்.ஆகவே நீங்கள் இப்பொழுது செய்து வருவது போல, ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுங்கள் ஒருவரை ஒருவர் வளர்ச்சியடையச் செய்யுங்கள்.

**பதில்பாடல் :** வாழ்வோரின் நாட்டினிலே ஆண்டவரின்
நலன்களைக் காண்பேன்

**நற்செய்தி : லூக்கா 4 : 31 - 37**

அக்காலத்தில் இயேசு கலிலேயாவிலுள்ள கப்பர்நாகும் ஊருக்குச் சென்று, ஓய்வு நாள்களில் மக்களுக்குக் கற்பித்து வந்தார். அவருடைய போதனையைக் குறித்து அவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். ஏனெனில் அவர் அதிகாரத்தோடு கற்பித்தார். தொழுகைக் கூடத்தில் தீய ஆவியான பேய் பிடித்திருந்த ஒருவர் இருந்தார். அவரைப் பிடித்திருந்த பேய், "ஐயோ! நாசரேத்து இயேசுவே, உமக்கு இங்கு என்ன வேலை? எங்களை ஒழித்துவிடவா வந்தீர்? நீர் யார் என எனக்குத் தெரியும். நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்" என்று உரத்த குரலில் கத்தியது. "வாயை மூடு, இவரை விட்டு வெளியே போ" என்று இயேசு அதனை அதட்டினார். அப்பொழுது பேய் பிடித்தவரை அவர்கள் நடுவே விழச்செய்து, அவருக்கு ஒரு தீங்கும் இழைக்காமல் பேய் அவரைவிட்டு வெளியேறிற்று. எல்லாரும் திகைப்படைந்து, "எப்படிப் பேசுகிறார், பாருங்கள்! அதிகாரத்தோடும் வல்லமையோடும் தீய ஆவிகளுக்குக் கட்டளையிடுகிறார் அவையும் போய் விடுகின்றனவே!" என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டனர். அவரைப்பற்றிய பேச்சு சுற்றுப்புறமெங்கும் பரவியது.

**தியானம்:** மனிதன் ஆண்டவரை மட்டும் அன்பு செய்ய வேண்டும். இதே வார்த்தையை ஆண்டவர் இயேசு வேறு வார்த்தைகளில் சொல்கின்றார். கடவுளாகிய ஆண்டவரை முழு மனத்தோடும் முழு இருதயத்தோடும் முழு ஆன்மாவோடும் அன்பு செய்வது, அயலானை அன்பு செய்வது. ஆண்டவர் இயேசு மீண்டுமாய் அறிவுறுத்துகின்றார். இந்நற்செய்தியில் நாம் ஆண்டவரை அன்பு செய்ய அடித்தளமான காரியங்களை வெளிப்படுத்துகின்றார். நற்செய்தியில் தீய ஆவி ஆண்டவர் இயேசுவை புரிந்து தெரிந்து வைத்திருக்கிறது. இரண்டு நபர்களுக்கிடையே அன்பு இருக்க வேண்டுமானால் புரிதல், தெரிதல் இருக்க வேண்டும் .தீய ஆவி ஆண்டவர் இயேசுவை நாசரேத்தூர் இயேசுவே உமக்கு என்ன வேலை? என்று கேட்கிறது. இன்று நாங்கள் இயேசுவை எந்த அளவு அறிந்து தெரிந்து வைத்திருக்கிறோம்? தீய ஆவி ஆண்டவர் இயேசு யார் என்பதை புரிந்து வைத்திருக்கிறது. ஆண்டவர் இயேசு இருக்கும் இடத்தில் தீமை இல்லை என்பதை தெரிந்து வைத்திருக்கிறது. இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் திருப்பலியின் மூலம் உனக்குள்ளே வர இருக்கிறார். உனக்குள்ளே தீமையான காரியங்கள் இருக்கிறதா? தீய ஆவிகள் ஆண்டவரை அறிக்கை யிடுகின்றன. இன்று நமக்குள்ளாக இருக்கின்ற தீமையான காரியங்களை அழிப்போம். இயேசுவுக்கு எதிரான காரிபங்களை அழிப்போம. தீமைகளை அழித்து இயேசுவை உரிமையாக்கி கொள்வோம்.